| Published Date: | 23 Aug 2017 | Publication: | Maalai Bhoomi |
|---|---|---|---|
| Edition: | Puducherry | Page No: | 3 |

# TCS IT Wiz 2017 பதிப்பில் புதுச்சேரி மாணவர்கள் வெற்றி




**புதுச்சேரி, ஆக. 23–**

இந்தியாவின் முன்னணி தகவல் தொழில்நுட்ப சேவைகள், ஆலோசனை மற்றும் வர்த்தகத் தீர்வுகள் நிறுவனமான டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நடத்தும் இந்தியாவின் மிகப்பெரிய பள்ளிகளுக்கு இடையிலான புதிர் போட்டியான TCS IT Wiz ன் சென்னை பதிப்பு, 1250 க்கும் மேற்பட்ட மாணவர்களின் பங்கேற்புடன், ஆகஸ்ட் 17 அன்று மியூசிக் அகாடமியில் நடைபெற்றது. 620 க்கும் மேற்பட்ட அணிகளை வீழ்த்தி, கேந்திரிய வித்யாலயா எண்.2, புதுச்சேரி பள்ளியைச் சேர்ந்த து.ஜெயகிருஷ்ணன் மற்றும் யு.வேதபுரீஸ்வர் ஆகியோர் இதில் பிராந்திய வெற்றியாளர்களாக வெற்றிபெற்றனர். அவர்கள், இந்தியாவின் பிற 11 பிராந்திய அணிகளுடன், தேசிய அளவிலான இறுதிப்போட்டியில் போட்டியிடவுள்ளனர்.

பரிசுகளை தலைமை விருந்தினர், சென்னை, கான்சுலேட் ஜெனரல் ஆஃப் ஜெர்மனி, அசிம் ஃபபிக் அவர்கள், சென்னை, TCSன் செயல்பாடுகள் பிரிவின் தலைவர் சுரேஷ் ராமன் அவர்களுடன் இணைந்து வழங்கினர். இப்புதிர் போட்டியை பிரபல குவிஸ் மாஸ்டர் கிரி 'பிக்பிரெய்ன்' பாலசுப்ரமணியம் அவர்கள் நடத்தினார்.